# ‘பிக்பாஸ் அரசின்’ பித்தலாட்டங்கள்: தலைமைப் பண்பின்மையும் ‘ஹனிமூன்’ காலத்தின் முடிவும்!

சமீபத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் (த.வெ.க.) இணைய உதிரிக் கும்பல், ‘பிக்பாஸ்’ (Big Boss) நிகழ்ச்சியை நடத்திவரும் நடிகர் விஜய் சேதுபதியின் மீது கடும் தாக்குதல்களை நடத்தி வருகிறது. பிக்பாஸிற்கும் விஜய்க்கும் என்ன சம்பந்தம்? ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் கூறப்படும் கருத்துகள் ஏன் த.வெ.க.வினரைப் பாதிக்கின்றன? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது; கள்ளம் உள்ள மனம் கலங்குகிறது.

**பிரச்சினை விஜய் சேதுபதியின் கருத்துகள் அல்ல, ஓர் அரசு ஒரு பிக்பாஸ் நிகழ்ச்சி போல நடந்துகொண்டிருப்பதுதான் பிரச்சினை. அதனால்தான் அந்த நிகழ்ச்சியின் பங்கேற்பாளர்களைப் பற்றி என்ன விமர்சனம் சொன்னாலும், அது அரசைப் பற்றிய, முதலமைச்சரைப் பற்றிய விமர்சனமாகவே மாறிவிடுகிறது. முதலமைச்சரின் பெயரையோ அரசின் பெயரையோ குறிப்பிடாமல் வேறு எங்கோ யாரை நோக்கியோ ஒருவர் பொதுப்படையாகச் சொல்லக்கூடிய விமர்சனங்களைக்கூட, அவர்கள் தங்கள் மீது எய்யப்பட்ட அம்புகளாகவே கருதுகின்றனர். எல்லா எதிர்மறை விமர்சனங்களுக்கும் தங்களைத் தகுதியாக்கிக் கொண்டதே த.வெ.க. அரசு மற்றும் அந்தக் கட்சியின் சாதனை!**

பிக்பாஸ் நிகழ்ச்சி என்பது மனிதர்களிடம் மறைந்திருக்கும் கீழ்மையான குணங்களையும், பலவீனங்களையும், குற்ற உணர்ச்சியையும் வெளிப்படுத்தும் நிகழ்ச்சி என்று கருதப்படுகிறது. அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருப்பவர்களைப் பற்றி வைக்கப்படும் விமர்சனங்களைக் கண்டு ஒரு கட்சி பதறுவதன் காரணத்தை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. பிக்பாஸ் வீட்டில் பங்கேற்பாளர்களின் எதிர்மறைக் குணங்களாகச் சிலவற்றை விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள். அவை த.வெ.க. அரசோடு எவ்வாறு பொருந்திப் போகின்றன என்பதைப் பார்ப்போம்.

**பிக்பாஸ் குணநலன்களும் த.வெ.க. அரசின் செயல்பாடுகளும்**

**1. அதீத ஆத்திரம்** (Aggression)

• **பிக்பாஸ் பாணி:** சிறிய விஷயங்களுக்குக்கூடப் பொறுமையிழந்து மற்றவர்களிடம் கத்துவது மற்றும் ஆக்ரோஷமாக நடந்துகொள்வது.

• **த.வெ.க. நிலைப்பாடு:** இதற்குச் சிறந்த உதாரணம் முதல்வர் விஜய்யின் பொதுக்கூட்டங்கள் மற்றும் சட்டமன்றப் பேச்சுகள். எதிராளிகளை இழி சைகைகள் மற்றும் வன்மமான சொற்கள் மூலம் ஆத்திரமூட்டுதல், அநாவசியமாகக் குரலை உயர்த்திக் கத்துதல், பண்பாடற்ற உடல் மொழியை வெளிப்படுத்துதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தமிழக சட்டமன்றக் கூட்டத்தொடரில் எதிர்க்கட்சியான தி.மு.க.வை விமர்சித்து விஜய் பேசியபோது, முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை குறித்து அவர் வெளிப்படுத்திய சில உடல்மொழிகள் மற்றும் சைகைகள் (Jaw Gesture) இதற்குச் சான்றாகும். இது போன்ற செயல்களில் பிக்பாஸ் பங்கேற்பாளர்கள் ஈடுபடுவது வழக்கமான ஒன்று.

**2. வார்த்தை வன்முறை** (Abusive Language)

• **பிக்பாஸ் பாணி:** வாக்குவாதங்களின்போது எல்லையை மீறி, தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசுவது அல்லது தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்துவது.

• **த.வெ.க. நிலைப்பாடு:** இதற்கும் சிறந்த உதாரணம் விஜய்யின் பல பொன்மொழிகள்: “கொத்து பரோட்டா போடுவேன்,” “சும்மாவே காட்டு காட்டுன்னு காட்டுவேன்,” “வச்சு செய்யணும்,” “உங்க அப்பா எங்கே?”, “கவர்ச்சி காட்ட நான் என்ன...?”, “வாயில் நல்லா வந்துடும்... நான் என்ன டேஷ்க்கு... ஓட ஓட விரட்டுங்க” இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். இத்தகைய வன்முறையான வார்த்தைப் பிரயோகங்கள் பிக்பாஸ் பங்கேற்பாளர்களிடையே நடப்பது வழக்கமான ஒன்று.

**3. விமர்சனங்களை ஏற்காமை** (Inability to Accept Criticism)

• **பிக்பாஸ் பாணி:** வார இறுதியில் தொகுப்பாளர் அல்லது சக போட்டியாளர்கள் தங்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது, அதை ஏற்றுக்கொள்ளாமல் வாதாடுவது.

• **த.வெ.க. நிலைப்பாடு: கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் எதிர்க்கட்சித் தலைவர் இந்த ஆட்சியில் சட்டம்ஒழுங்குச் சீர்கேடு, மின்வெட்டு, புதிய திட்டங்கள் இல்லாமை, நிர்வாகப் பின்னடைவு, விவசாயிகள் பிரச்சினை என முக்கியமான பிரச்சினைகளை எழுப்பினார். விஜய் எதற்கும் பதில் சொல்லாமல், சட்டமன்றத்தில் தி.மு.க மீது அவதூறுகளைக் கூறித் தனது அரசின் தோல்விகளை மறைக்க முயன்றார். பரந்தூர் விமான நிலையத் திட்டம் ரத்து, பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம், சென்னை விமான நிலையத்தைத் தனியாருக்கு அளிக்கும் முயற்சி எனப் பலவற்றிற்குக் கூட்டணிக் கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்குக்கூடப் பதில் சொல்வதில்லை. மாறாக, விதண்டாவாதங்களிலும் தனிநபர் தாக்குதல்களிலும் த,வெ,க. அமைச்சர்கள் ஈடுபடுகிறார்கள்.**

இது முற்றிலும் பிக்பாஸ் பங்கேற்பாளர்களின் பாணி. விஜய் மட்டுமல்ல, த.வெ.க.வின் அமைச்சர்களும் இதே பாணியைப் பின்பற்றுகின்றனர். உதாரணமாக, மின்வெட்டு என்றால் “திமுககாரர்கள் ஃபியூஸ் கேரியரைப் (Fuse carrier) பிடுங்கிவிட்டார்கள்” என்பது; காவிரியில் தண்ணீர் வரவில்லையென்றால் “தி.மு.க. 75 ஆண்டுகளுக்கு முன்பு போட்ட ஒப்பந்தம்தான் காரணம்” என்பது. இதற்கும் மேலாகப் போய், விமர்சிப்பவர்கள் மீது பொய் வழக்குகளைப் போட்டு அச்சுறுத்த முயல்வது.

**4. கூட்டணி அமைத்தல்** (Groupism)

• **பிக்பாஸ் பாணி:** வீட்டில் உள்ள மற்றவர்களைத் தனிமைப்படுத்த அல்லது வலிமையான போட்டியாளர்களை வீழ்த்த ரகசியமாகத் தனிக்குழுக்களை உருவாக்கி அரசியல் செய்வது.

• **த.வெ.க. நிலைப்பாடு:** இந்த பிக்பாஸ் இயல்பின் அடிப்படையில்தான் த.வெ.க. அரசே நின்றுகொண்டிருக்கிறது. தி.மு.க.வைப் பலவீனப்படுத்த ரகசியப் பேரங்கள் மூலம் கூட்டணிக் கட்சிகளைத் தன் பக்கம் இழுத்தது; குதிரைப் பேரத்தின் மூலம் அ.தி.மு.க. மற்றும் அ.ம.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கியது; உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட ம.தி.மு.க. உறுப்பினர்களை இழுக்க வைகோ மூலம் பேரம் பேசியது; காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக்கொண்டே பா.ஜ.க. அரசின் எல்லா திட்டங்களையும் நிறை வேற்றித் தருவது எனச் சதி அரசியலின் (Groupism) எல்லா தகிடுதித்தங்களையும் த.வெ.க. அரசு செய்துவருகிறது.

**5. போலி முகமூடி** (Fake Personality)

• **பிக்பாஸ் பாணி:** தமக்கான ஆதரவைப் பெறுவதற்காகத் தங்களின் உண்மையான குணத்தை மறைத்து, மிகவும் நல்லவர்கள் போல கேமரா முன்னால் நடிப்பது.

• **த.வெ.க. நிலைப்பாடு:** இந்த பிக்பாஸ் வீட்டின் குணம்தான் விஜய் அவர்களின் அசலான அரசியல். ‘ ரீல்ஸ்’ மூலம் விஜய் குறித்தும் த.வெ,க குறித்தும் பரப்பும் போலித் தகவல்கள் மற்றும் தனிநபர் வழிபாட்டு பிம்பங்களைத் தவிர அவர்களுக்கென்று எந்த அரசியலும் இல்லை.

**‘நீட்’டை (NEET) எதிர்ப்பது போல நாடகமாடிவிட்டு ‘நீட்’ எதிர்ப்புப் போராட்டங்களை ஒடுக்குவது; தேர்தலுக்கு முன் தூய்மைப் பணியாளர்களுக்காகக் குரல் கொடுப்பது போல் பாசங்கு செய்துவிட்டு, ஆட்சிக்கு வந்த பின் அவர்களைத் தெருவில் விடுவது; “பாலியல் குற்றங்களை நான் ஆட்சிக்கு வந்தால் ஒழித்துவிடுவேன்” என முழங்கிவிட்டு, ஆட்சிக்கு வந்ததும் சொந்தக் கட்சிக்காரர்கள் செய்த குற்றங்களைக் கூட மூடி மறைப்பது; வாக்குறுதிகளை நிறை வேற்றாமல் இருப்பது அல்லது பாதி அளவுக்கு நிறைவேற்றி ஏமாற்றுவது; பரந்தூரில் விவசாயிகளுக்காக விமான நிலையத் திட்டத்தைக் கைவிடுவதாகக் கூறி விட்டு, கையகப்படுத்திய நிலத்தைச் சிப்காட் (SIPCOT) தொழிற்பூங்காவாக மாற்றப்போவதாகச் சொல்லி விவசாயிகளை ஏமாற்றுவது என இந்த பிக்பாஸ் அரசின் நடிப்புக் காட்சிகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.**



**மனுஷ்ய புத்திரன்**
மாநில ஆலோசகர், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

**6. முதுகில் குத்துதல்** (Backstabbing)

• **பிக்பாஸ் பாணி:** வெளியில் நண்பர்களைப் போலப் பழகிவிட்டு, ரகசியமாக அவர்களுக்கு எதிராகத் திட்டம் தீட்டுவது அல்லது பரிந்துரைப்பது (Nominate).

• **த.வெ.க. நிலைப்பாடு:** தி.மு.க.வோடு இருந்த கூட்டணிக் கட்சிகளைப் பேரம் பேசித் தங்கள் ஆட்சிக்கு ஆதரவான கூட்டணியில் கொண்டுவந்த பிறகு, இப்போது இடதுசாரிகள் மற்றும் வி.சி.க.வைக் கழற்றி விடுவதற்காகப் பா.ம.க. மற்றும் அ.தி.மு.க. எடப்பாடி எதிர்ப்புக் குழுவினருடன் இணக்கமாக இருப்பது த.வெ.க.வின் இன்றைய பிக்பாஸ் அரசியல். இடைத்தேர்தலில் தங்கள் கூட்டணிக் கட்சித் தலைவர்களைத் தங்களது நட்சத்திரப் பேச்சாளர்களாக அறிவித்து அந்தக் கட்சிகளைத் தனித்துவமில்லாமல் ஆக்குதல்; கம்யூனிஸ்டுகளின் ஆதரவுடனேயே ஆட்சி நடத்திக்கொண்டு அவர்களது மாணவர் அமைப்புகளைக் கல்லூரிகளில் முடக்குதல்; தாசில்தார் மூலம் கம்யூனிஸ்டுகளைக் கணக்கெடுக்கச் சொல்லுதல்; வி.சி.க.விற்குள் ஆதவ் அர்ஜுனா ஆதரவு அணி ஒன்றை உருவாக்கித் திருமாவளவனின் தலைமைத்துவத்தைப் பலவீனப்படுத்துதல் எனப் பலவற்றைத் தன் கூட்டணிக் கட்சிகளுக்கு எதிராகவே த.வெ.க. செய்திருக்கிறது.

**7. பொய் பேசுதல்** (Lying)

• **பிக்பாஸ் பாணி:** ஒருவரைப் பற்றி உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கூறுதல்.

• **த.வெ.க. நிலைப்பாடு:** தி.மு.க.விற்கு எதிராக அன்றாடம் பொய் சொல்வதன் மூலமே தன் பிழைப்பை ஓட்டிக் கொண்டிருக்கும் கட்சி த.வெ.க. ‘பார்ட்டி ஃபண்ட்’ (Party fund), டாஸ்மாக், அவசரநிலைக் காலத்தில் (Emergency) தி.மு.க. தலைவர் கைது, தொழிலதிபர் ஒருவரின் மீதான பாலியல் குற்றச்சாட்டில் வழக்குப் பதிவு செய்த தி.மு.க. அரசு மீதே பழி போடுவது என ஆதாரமற்ற பொய்களையும் புனைசுருட்டுகளையும் பரப்பியே காலத்தை ஓட்டிவிடலாம் என்பதுதான் த.வெ.க. அரசின் திட்டம்.

**8. செண்டிமெண்ட் நாடகம்** (Sentiment Drama)

• **பிக்பாஸ் பாணி:** பிரச்சினைகளைத் திசைதிருப்பப் ‘பாதிக்கப்பட்டவர்’ (Victim) வேடம் போடுவது.

• **த.வெ.க. நிலைப்பாடு:** கரூர் சம்பவம் தொடங்கி இந்த ஆட்சியின் மீதான அத்தனை குற்றச்சாட்டுகளுக்கும் பதிலாக விஜய் இந்த நாடகத்தைத்தான் ஆடி வருகிறார். ‘அண்ணன் செண்டிமெண்ட்,’ ‘மாமா செண்டிமெண்ட்’ என அவ்வப்போது நடிப்புக் கண்ணீரைச் சிந்துவது என்பதுதான் இன்றுவரை பின்பற்றப்படும் ஒரே உத்தி.

**9. உள்நோக்கங்களை மறைக்கும் போலி நாடகங்கள்** (Hypocrisy)

• **பிக்பாஸ் பாணி:** உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறுதல்.

• **த.வெ.க. நிலைப்பாடு:** சென்னையில் இருக்கும் நிறுவனத்துடன் லண்டனுக்குப் போய் ஒப்பந்தம் செய்து தன் தனிப்பட்ட பயணத்தை அரசுப் பயணமாக நியாயப்படுத்துவதும்; பட்டினப்பாக்கத்தில் சட்டமன்றம் அமைக்க 1,200 கோடி ரூபாய் வரவுசெலவுத் திட்டம் (Budget) வரை அறிவித்து அரசாணை வெளியிட்டுவிட்டு எதிர்ப்பு கிளம்பியதும் “முதலமைச்சர் இது பற்றி இறுதி முடிவெடுப்பார்” எனப் பின் வாங்குவதும்; ‘தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம்’, ‘முதலமைச்சரின் புதிய அறை’ போன்றவற்றில் சந்தேகத்திற்கிடமான ஒப்பந்தப்புள்ளிகள் (Tenders); சென்னை விமான நிலையத்தைத் தனியாரிடம் கொடுத்துவிடுங்கள் என்று கடிதம் எழுதுவது என நாடகங்கள் ஒன்றா, இரண்டா?

**‘ஹனிமூன்’ காலமும் வெளிப்பட்ட உண்மை முகமும்**

நான் மேலே குறிப்பிட்ட பிக்பாஸ் நிகழ்ச்சியின் பத்துப் பொருத்தங்களும் அப்படியே த.வெ.க. அரசுக்கும் முதலமைச்சர் விஜய்க்கும் பொருந்திப்போவதைப் பார்க்கிறோம். இந்தச் சூழலில்தான் பிக்பாஸ் நிகழ்ச்சியை நடத்தும் விஜய் சேதுபதி, பிக்பாஸ் வீட்டில் தலைமைப் பொறுப்பு ஏற்பவர்களிடம்:

**“யோசிக்காமல் வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, பின்னர் பிரச்சினைகளும் பொறுப்புகளும் வரும்போது எதிர்தரப்பைக் குறை கூறிவிட்டு ஓடிவிடுவது தலைமைப் பண்பு அல்ல, அது ஏமாற்று வேலை.”**

என்று குறிப்பிட்டதற்கோ, அல்லது:

**“புதிய தலைமைப் பொறுப்பேற்ற ஒரு போட்டியாளர் தன்னால் இரண்டு வாரங்களாகியும் போட்டியைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. உங்களுக்கான ‘ஹனிமூன்’ காலம் (Honeymoon period) முடிந்துவிட்டது. அது ஒரு குறிப்பிட்ட நாட்கள்தான். அதை அப்படியே வைத்துக்கொண்டு காலத்தை ஓட்ட முடியாது.”**

என்று சொன்னதற்கோ, ஏதோ எதிர்க்கட்சித் தலைவர் விடுக்கும் அறிக்கையைக் கண்டு பதறுவது போலத் த.வெ.க.வினர் பதறுகின்றனர்.

ஆனால், அவர் கரூர் படுகளத்தை விட்டு ஓடி வந்தது குறித்துத் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜயிடம், **“தலைமைத்துவப் பண்பே இல்லை”** (Leadership of poor quality) என்று சென்னை உயர் நீதிமன்றம் கடுமையாக விமர்சித்தது. மேலும் பொதுவெளியில் அவரது பேச்சுகள், செயல்கள், எதிர்க்கட்சிகள் மீது செய்யும் அவதூறுகள், ஊடகங்களைச் சந்திக்க மறுப்பது, பா.ஜ.க.விற்கு அஞ்சி நடுங்குவது, எந்தவொரு தொலைநோக்குத் திட்டமும் இல்லாமை, வெறுப்பு அரசியல் என அவரது தலைமைப் பண்பின்மைக்கு ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன.

**மக்கள் மன்றத்தின் தீர்ப்பு**

**ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்களாகிவிட்டன. எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படாதது மட்டுமன்றி, அவை மிகவும் பெரிதாகிவிட்டன. 2,500 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை, வேலையில்லா இளைஞர்களுக்கு ஊக்கத்தொகை, அனைத்துப் பேருந்துகளிலும் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து என்ற வாக்குறுதிகளைப் பற்றியெல்லாம் பேச்சே இல்லை. மின்கட்டணக் கொள்ளை மக்களைக் கொதிப்படையச் செய்திருக்கிறது; ஆவின் பால் தட்டுப்பாடு மின் தட்டுப்பாடு விலைவாசி உயர்வு தமிழகமெங்கும் நிலவுகிறது குதிரைப் பேரத்தால் கொண்டுவரப்பட்ட இடைத்தேர்தல் ஜனநாயகத்தை படுகுழியில் தள்ளியிருக்கிறது.**

மக்களிடம் இனியும் “நாங்கள் புதியவர்கள்” என்று சொல்லி ‘ரீல்’ (Reel) ஓட்ட முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான், “உங்கள் ‘ஹனிமூன்’ காலம் முடிந்துவிட்டது” எனப் பிக்பாஸ் நிகழ்ச்சியில் விஜய் சேதுபதி சொன்னால் இவர்களுக்குப் பதறுகிறது.

ஐயா, நீங்கள் விஜய் சேதுபதி மீது கோபப்பட்டுப் பயனில்லை. நீங்கள் ஆட்சி நடத்தவில்லை, பிக்பாஸ் நிகழ்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறீர்கள்! நீங்கள் இருக்க வேண்டியது கோட்டையில் அல்ல; பிக்பாஸ் வீட்டில்!

**யார் மீது யார் கல்லெறிந்தாலும் அது உங்கள் மீது எறியப்பட்டதாகப் பயம் வருகிறது என்றால், மக்கள் கல்லெறியும் காலம் வருகிறது என்றுதான் பொருள்!**

---

**மாவட்டச் செயலாளர்கள் எ.வ.வேலு - தா.மோ.அன்பரசன் - க.சுந்தர் பங்கேற்பு!**

# மதுராந்தகம் தொகுதி இடைதேர்தலில் கழக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. தேர்தல் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அறிவிப்பு!

வேலூர், செப். 23 –

வேலூர் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைதேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.விற்கு ஒதுக்கப்பட்ட பாகங்களில் தேர்தல் களப்பணி ஆற்றும் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (23.09.2026 – புதன்கிழமை) நண்பகல் 12.00 மணியளவில் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி. எலப்பாக்கம் கிராமத்தில் வேலூர் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் தலைமையில் அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியச் செயலாளர் டி.வி.கோகுலகண்ணன் முன்னிலையில் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளருமான எ.வ.வேலு, முன்னாள் அமைச்சரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளருமான தா.மோ.அன்பரசன் மற்றும் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் ஆகியோர்கள் பங்கேற்று கழக வேட்பாளர் இ.பரந்தாமன் மாபெரும் வெற்றி பெற தேர்தல் வியூகங்கள் குறித்து சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

எனவே, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை கழக நிர்வாகி கள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊர்கிளை நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக இந்நாள், முன்னாள் முன்னோடிகள் ஆகியோர்கள் திரளாக கலந்து கொண்டு சிற ப்பித்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் இ. பரந்தாமனை ஆதரித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கிராமம் கிராமமாக சென்று 100 நாள் வேலை செய்யும் பெண்களிடம் கழக ஆட்சியில் செய்த பல்வேறு நலத்திட்டங்களை விளக்கி கூறி உதயசூரியனுக்கு வாக்களிக்குமாறு ஆதரவு திரட்டினார் காஞ்சிபுரம் மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் முன்னாள் எம்.எல்.ஏ இ. கருணாநிதி, திருப்போரூர் ஒன்றிய செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். ஆர். எல். இதயவர்மன் காஞ்சி வடக்கு மாவட்ட கழக இளைஞரணி துணை அமைப்பாளர் தையூர் வீ. விஜயகுமார் மதுராந்தகம் தெற்கு ஒன்றிய அவை தலைவர் சசிகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.